TNVR150026062025
Presented on : 13-10-2025
Registered on : 09-02-2026
Decided on : 15-06-2026
Duration : 0 years, 8 months, 2 days

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை : செல்வி.D.ஜெயபிரதா, B.A.,B.L.,(Hons)**

**நீதித்துறை நடுவர், அருப்புக்கோட்டை**

**2026 -ம் வருடம் ஜுன் திங்கள் 15 ம் நாள் திங்கள் கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.40/2026**

******

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம்,
குற்ற எண்.254/2025
பிரிவுகள். 281, 125(b) BNS ... புகார்தாரர்

**-எதிர்-**

பால்ராஜ், 47/26,
த.பெ. பெருமாள்,
அஜீஸ் நகர் 9 வது தெரு,
அருப்புக்கோட்டை. ... எதிரி

**<u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்:

07.04.2021-ன் படி.)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | இவ்வழக்கில் எதிரி 14.08.2025 ம் தேதி கைது செய்யப்பட்டு அன்றே காவல் நிலைய பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். |
| ii. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 09.02.2026 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம், பிரிவுகள் 251, 263, 269 மற்றும் 67 பா.நா.சு.ச.ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி(பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 15.05.2026 |
| v. | பா.நா.சு.ச. பிரிவு 355 -ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | u/s.330 பா.நி.சு.சா.வின் கீழ் 09.06.2026 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றே தேதி அனுமதிக்கப்பட்டது.<br>u/s.348 பா.நி.சு.சா.வின் கீழ் 09.06.2026 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றே தேதி அனுமதிக்கப்பட்டது.<br>u/s.359 பா.நி.சு.சா.வின் கீழ் 02.06.2026 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றே தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | : | முதல் குறுக்கு விசாரணை விசாரணை |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட விபரம் | அ.சா.1 | 02.06.2026 | 02.06.2026 |
| | | அ.சா.2 | 02.06.2026 | 02.06.2026 |
| | | அ.சா.3 | 09.06.2026 | 09.06.2026 |
| vii. | பா.நா.சு.ச. பிரிவு 351 (1) (b)-ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : 11.06.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : இல்லை | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : இல்லை | | |

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண்.106(1)-ன் படி விபரங்கள்)**

1. வ.எண். : CC 40/2026

2. காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் : அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம், குற்ற எண்.254/2025

3. **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்**

பெயர் : பால்ராஜ், 47/26,
த.பெ. பெருமாள்,

தகப்பனார் / கணவர் பெயர் : அஜீஸ் நகர் 9 வது தெரு,

| | | |
|---|---|---|
| தொழில் | : | அருப்புக்கோட்டை. |
| இருப்பிட முகவரி | : | |
| வயது | | |

**தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு | : | 19.07.2025 |
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 21.07.2025 |
| 6. | கைது செய்யப்பட்டது | : | 14.08.2025 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | 14.08.2025 |
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 02.06.2026 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 11.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 15.06.2026 |
| 12. | தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி | : | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை |

இவ்வழக்கானது கடந்த 09.02.2026 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக 11.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.1, அருப்புக்கோட்டை திரு.V.செந்தில்குமார், B.L., அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. பாலமுருகன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், செய்த வாதங்களையும் கேட்டறிந்து, சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்ருமாறு**

இவ்வழக்கில் கடந்த 19.07.2025 ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு சாட்சி தியாகராஜன் தங்களுடைய கடையை திறப்பதற்காக எஸ்.பி.கே பள்ளிச் சாலையில் சென்னை ஹாட்பப்ஸ் கடை அருகே கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டின் இடது புறம் நடந்து சென்ற போது தியாகராஜனுக்கு பின்னால் வந்த TN 67 BW 5375 என்ற பைக்கை ஓட்டி வந்த எதிரி தான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் , கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தியாகராஜன் மீது மோதியதில் தியாகராஜன் கீழே விழுச்செய்து அவருக்கு கொடுங்காயம் ஏற்படக் காரணமாக இருந்த குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b)BNS ன் கீழ் அருப்புக்கோட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு கோப்பிற்கு எடுத்த உத்தரவு**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்ளை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் எதிரி முன்னிலையானதும் வழக்காவணங்கள் 230BNSS ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனையதல்**

போதிய கால அவகாசம் கொடுத்து எதிரியிடம் குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய ஆதாரங்கள் இருந்ததாலும், பா.நா.சு.ச. 263 ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் **281, 125(b) BNS ன்** கீழ் குற்றச்சாட்டு வனைந்து பா.நா.சு.ச பிரிவு 263 (2)ன் படி எதிரிக்கு தமிழில் விளக்கிக் கேட்டபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்துள்ளதால் பா.நா.சு.ச பிரிவு 265 ன் கீழ் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள்**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள்கள் எதுவும் குறியீடு செய்யபடவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1. தங்ககுமார் அவரது சாட்சியத்தில், கடந்த 19.07.2025 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் அவரது தந்தை தியாகராஜன் எஸ்.பி.கே. பெண்கள் மேல்நிலை பள்ளி சாலையில் சென்று கொண்டிருந்தபோது ஒரு இருசக்கர வாகனம் மோதி அவரது தந்தைக்கு விபத்து ஏற்பட்டதாக அவரது தந்தை அவருக்கு தகவல் தெரிவித்ததாகவும், அவர் உடனே சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது அவரது தந்தைக்கு கை மற்றும் கால்களில் பலத்த காயங்கள் இருந்தது என்றும், அவரது தந்தையை அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் சம்பவம் தொடர்பாக அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அருகில் இருந்தவர்கள் விபத்து பற்றி அவரிடம் கூறியதன் அடிப்படையில் புகார் மனுவை அவர் கொடுத்ததாகவும், தற்போது அவர்களுக்கும், எதிரிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானமாகிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியான அசா.2. தியாகராஜன் அவரது சாட்சியத்தில் கடந்த 19.07.2025 ம் தேதி எஸ்.பி.கே பெண்கள் மேல்நிலை பள்ளி சாலையில் அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு இருசக்கர வாகனமானது அவர் மீது இடித்ததில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், விபத்தில் அவருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று அவருக்கு தெரியாது என்றும், அவர் மீது யார் மோதினார்கள் என்று

தெரியவில்லை என்றும், எதிரிக்கும், அவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானமாகிவிட்டதாக அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.3. சண்முகராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்), கடந்த 21.07.2025 ம் தேதி அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் உமாமாலினி அவர்கள் நிலைய பொறுப்பிலிருந்தபோது அ.சா.1. தங்ககுமார் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 254/2025 பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், பின்னர் சார்பு ஆய்வாளர் ஜானகிராமன் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.08.2025 ம் தேதி மதுரை வேலம்மாள் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட தியாகராஜன் என்பவருக்கு சிகிச்சையளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் அமரோஸ்வரரெட்டி அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281, 125(a) BNS ல் இருந்து சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளதாகவும், பின்னர் 25.09.2025 ம் தேதி சார்பு ஆய்வாளர் ஜானகிராமன் அவர்கள் இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 67 BW 5375 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி 01.10.2025 ம் தேதி அருப்புக்கோட்டை வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வராஜ் அவர்களை விசாரித்து விபத்தாய்வு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7. <u>பா.நா.சு.ச பிரிவு 351 (1) (ஆ)</u>**

அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்த பிறகு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகள் குறித்து பா.நா.சு.ச பிரிவு 351 (1) (ஆ) ன் படி வினவிய போது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்றும், எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி</u>** :

வழக்கு ஆவணங்கள் மற்றும் பொருண்மைகளை பார்க்கும்போது, இந்த வழக்கில் பரிசீலிக்க எழும் கேள்விகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன,

**i. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்றத்தின் கூறுகளை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

**ii. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கை அரசு தரப்பு அனைத்து நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பால் நிரூபித்துள்ளதா?**

இரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்கள் வழக்கை நிரூபிக்க தங்கள் வாதங்களை முன்வைத்தனர்.

**9.பரிசீலனை மற்றும் முடிவுகள்**

பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் பிரிவு 104 படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபனம் செய்யப்பட வேண்டிய சுமையானது அரசு தரப்பையே சாரும்.

**9.1** இவ்வழக்கில் எதிரி TN 67 BW 5375 என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலையின் இடதுபுறம் நடந்து சென்ற தியாகராஜன் மீது மோதி, அவரை கீழே விழச்செய்து அவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.2.** எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. மேற்கூறிய குற்றங்களின் கூறுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில், எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று, அதன் விளைவாக சாலையில்

நடந்து சென்ற தியாகராஜன் மீது மோதி அவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய வேண்டும்.

**9.3.** மேற்படி முதல் நிலையைச் சுமையை பூர்த்தி செய்ய அரசுத்தரப்பில் கண்-ணுற்ற மற்றும் காயம்பட்ட சாட்சியான அ.சா.2. தியாகராஜன் முன்மொழியப்பட்டார். அ.-சா.2. அவரது சாட்சியத்தில் கடந்த 19.07.2025 ம் தேதி எஸ்.பி.கே பெண்கள் மேல்நிலை பள்ளி சாலையில் அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு இருசக்கர வாகனமானது அவர் மீது இடித்ததில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், விபத்தில் அவருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று அவருக்கு தெரியாது என்றும், அவர் மீது யார் மோதினார்கள் என்று தெரியவில்லை என்றும், எதிரிக்கும், அவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானமாகிவிட்டதாக அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

**9.4.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1. தங்ககுமார் அவரது சாட்சியத்தில், கடந்த 19.07.2025 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் அவரது தந்தை தியாகராஜன் எஸ்.பி.கே. பெண்கள் மேல்நிலை பள்ளி சாலையில் சென்று கொண்டிருந்தபோது ஒரு இருசக்கர வாகனம் மோதி அவரது தந்தைக்கு விபத்து ஏற்பட்டதாக அவரது தந்தை அவருக்கு தகவல் தெரிவித்ததாகவும், அவர் உடனே சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது அவரது தந்தைக்கு கை மற்றும் கால்களில் பலத்த காயங்கள் இருந்தது என்றும், அவரது தந்தையை அருப்புக்கோட்டையில் உள்ள தனியார்

மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் சம்பவம் தொடர்பாக அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அருகில் இருந்தவர்கள் விபத்து பற்றி அவரிடம் கூறியதன் அடிப்படையில் புகார் மனுவை அவர் கொடுத்ததாகவும், தற்போது அவர்களுக்கும், எதிரிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானமாகிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களில் இருந்து உண்மையில் எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டதா என்று முடிவை எடுப்பதற்கான போதுமான சாட்சியங்களை அரசு தரப்பில் சமர்ப்பிக்க தவறி விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.5.** மேலும் இவ்வழக்கில் அசா.1 மற்றும் அ.சா.2. ஆகியோர்கள் எதிரியுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் பா.நா.சு.ச. பிரிவு 359 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இவ்வழக்கின் பிரிவு 281 BNS சமாதானம் செய்ய இயலாத குற்றப்பிரிவு என்பதனால் மேற்படிமனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**9.6.** மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2. அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் விசாரணை அதிகாரியான அ.சா.3 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.7.** எனவே, மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரி தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தியாகராஜனுக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்பதனை போதுமான சாட்சி மற்றும் சான்றாவணங்களுடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க அரசுத்தரப்பில் தவறிவிட்டதாலும், அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒப்பிட்டுப் பரிசீலிக்கும்போது முரண்பாடு ஏற்படுவதாலும், அரசுத்தரப்பு வழக்கின் மீது தோன்றும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10. முடிவு:**

**முடிவாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி எதிரியின் மீது நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மேல்முறையீடு இல்லாத பட்சத்தில் தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 15 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,

அருப்புக்கோட்டை.

**பின் இணைப்பு :-**

**1) அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1. | தங்ககுமார் |
| அ.சா.2. | தியாகராஜன் |
| அ.சா.3 | சண்முகராஜ் ( சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1. | புகார் மனு |
| அ.சா.ஆ.2. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3. | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.4. | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5. | வேலம்மாள் மருத்துவ கல்லூாரி மருத்துவமனை விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.6 | வேலம்மாள் மருத்துவ கல்லூாரி மருத்துவமனை காயச்சான்று |

| | |
|---|---|
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( TN 67 BW 5375 ) |

**3) அரசு தரப்பு சான்றுபொருட்கள்**

இல்லை

**4) எதிரி தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை.

**பின் குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |
| 2. | வழக்கின் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை. |

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,

அருப்புக்கோட்டை.